6 பிப்ரவரி 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

ஆண்டின் 5 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்: **உலக சமூக நீதி தினம்**

# இதோ, நான்! என்னை அனுப்பும்!

சீமோன் பேதுரு தன்னுடைய தகுதியின்மையை ஒப்புக்கொண்டார்; இருந்தபோதும் பாவியான சீமோனை தம்மைப் பின்செல்லும்படி இயேசு அழைக்கின்றார். ஆண்டவருக்கு நம்மைப் பற்றிய சுய விவரம் தேவையில்லை அல்லது அவரோடுப் பணி செய்ய, ஒழுங்குமுறையோடு வரவேண்டும் என்ற தேவையை அவர் முன்வைக்கவில்லை (இரவுமுழுவதும் மீன்பிடித்துவிட்டு வரும் ஒரு மீனவரின் தோற்றம் எவ்வாறு இருக்கும் என்று எண்ணிப்பாருங்கள்) சற்றுமுன் பேதுருவும் அவரது மீன்பிடித் தோழர்களுமான யாக்கோபு, யோவான் ஆகியோரும் தாங்கள் இதுவரைக் கண்டிராத மீன்பாட்டையும் அதைக் கரையில் கொண்டு சேர்த்ததும் நடந்தது.



Image: ©freepix.com

இருந்தபோதும், அவர்கள் தங்களுடைய தொழில் மூலதனத்தை, படகுகளை சற்றுமுன் கிடைத்த பெரிய மீன்பாடு ஆகியவைகளை விட்டு விட்டு இயேசுவைப் பின்சென்றனர். சாதாரண மீனவர்களாக இருந்த அவர்களை அசாதாரண மீனவர்களாக, மனிதரைப் பிடிப்போராக மாற்ற இயேசு அவர்களை அழைக்கின்றார்.

சாதாரண வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த எத்தனையோ மக்களை கடவுள் அழைத்தார் என்று எண்ணற்ற நிகழ்வுகள் சொல்லப்பட்டுள்ளன. நற்செய்தி முழுக்க, பாவம், தோல்வி, தகுதியின்மை ஆகிய எதுவும் கடவுளின் அழைப்புக்குத் தடையாக இருந்ததில்லை என்பதைப் பார்க்கின்றோம். பெரும்பான்மையான நிகழ்வுகளில் கடவுள் அழைத்தபோது, அவர்கள் தயாராக இல்லை. பெரும்பாலும், தகுதியில்லை என்று எண்ணியதால் விருப்பமில்லாமல் இருந்துள்ளார்கள். அவர்கள் "தகுதியானவர்கள்" என்ற நிலையை அடையும்வரை கடவுள் காத்திருப்பதில்லை. கடவுளின் கண்காணிப்பில் தாங்கள் கொண்ட நம்பிக்கையால் அவர் இட்டப் பணியை அவர்களால் செய்ய இயலும் என்று கடவுள் அறிவார். திருத்தூதர்களில் கடைசியாக அழைக்கப்பட்டவர் என்று பவுல் தன்னைப் பற்றிக் கூறும்போது, அவர் கடவுளின் அழைப்புக்குத் தகுதியற்றவர் என்பதை அறிந்ததால் அவரே திகைத்து நிற்கிறார் என்பதில் ஆச்சரியமில்லை.

முதல் வாசகத்தில் எசாயா, உன்னத இறைவன் விண்ணகத்தில் எவ்வாறு மாட்சியோடு வீற்றிருக்கிறார் என்னும் காட்சியை நமக்குக் காட்டுகிறார். எசாயா தாம் தகுதியற்றவர் என்றும், தூய்மையற்ற உதடுகளைக் கொண்டவர் என்றும் கூறும்போது ஆண்டவரின் தூதர் எரியும் நெருப்புப்பொறியால் அவரின் உதடுகளைத் தொட்டார். இதுபோன்ற வேறுபட்ட வழிகளில் கடவுள் நம் அனைவரின் வாழ்விலும் செயலாற்றுகிறார். இன்றைய உலகில் நற்செய்தியை அறிவிப்பது அவசரமானது, மற்றும் அவசியமானது . நம்முடைய சாதாரண மற்றும் பரபரப்பான அல்லது சிக்கலான வாழ்க்கையின் மத்தியில் நமது பலவீனங்கள், தோல்விகள் மற்றும் தகுதியற்ற நிலையில் கடவுளின் பணி செய்ய நாம் அழைக்கப்படுகிறோம். பிறரைப் "பிடிப்பதற்கு" இயேசுவின் கைகளாக, கால்களாக நாம் தேவைப்படுகிறோம்.

தேவையான அளவிற்கு நாம் நேர்மையாக இருந்தால், நம்முடைய உள்ளத்தின் ஆழத்திலும் கடவுளின் இந்தக் கேள்வி ஒலிக்கும். "யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்" எசாயா இறைவாக்கினர் துணிவோடு பதில் அளித்ததுபோல "இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்" என்று துணிவோடு கூறுவோம்.

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

..... அனைத்தையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள்.

(லூக்கா 5:11)

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா: 6: 1-8;

திபா: 138: 1-5, 7-8;

1 கொரி: 15: 1-11 (அ) 15: 3-8, 11;

லூக்கா: 5: 1-11.

INTERNAL CIRCULATION ONLY

BUL 06/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org